1979 பிப்ரவரி 22]

விளங்கும்படியாக விளம்பரப் பலகைகள் போடப்பட்டிருக்கின்றன. ஆகவே, குழப்பம் ஏற்பட வாய்ப்பு ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, கிராம சித்த வைத்தியசாலைகளுக்கு வழங்கக்கூடிய மருந்துகள், ஓராண்டுக்குக் கொடுக்கக்கூடிய மருந்துகள் 2 மாதம் கூட வருவதில்லை என்ற புகார் அரசுக்கு வந்துள்ளதா ? அப்படியானால் அதைப் போக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : தலைவர் அவர்களே, சித்த மருத்துவப் பிரிவுக்கு வழங்கப்படுகிற மருந்துகள் சில இடங்களில் பற்றாக்குறையாக இருக்கிறது, சில இடங்களில் தேவைக்கு அதிகமாக இருக்கிறது என்பது இப்பொழுது ஆய்வு செய்யப்படுகிறது. ஆகவே இனிமேல், மருந்துகளை வழங்கும்போது அதிகமாகத் தேவைப்படும் இடங்களுக்கு அதிகமாகவும் குறைவாகத் தேவைப்படும் இடங்களுக்குக் குறைவாகவும் மருந்துகள் தருவதற்கு வழிவகை செய்யப்படும். ஏற்கனவே, மருந்துத் தட்டுப்பாடு எதுவும் இருக்கக்கூடாது என்று உரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் '' எலப் நிறுவனம் ''.

*வினா எண். 137—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தருமபுரி மாவட்டத்தில் '' எலப் நிறுவனம் '' மூலம் நடந்து வரும் தொழுநோய் கட்டுப்பாட்டு பணியாளர்க்ள் சம்பள விகிதங்கள் சீரமைக்கப்படுமா ?

(ஆ) எலப் நிறுவனத்தை அரசு ஏற்று நடத்தும் உத்தேசம் உள்ளதா ?

(இ) எலப் நிறுவனத்திற்கு அரசு ஏதேனும் மான்யம் வழங்கி ஆதரிக்குமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : (அ) இது தனியார் நிறுவனமாக இருப்பதால் சம்பள விகிதங்கள் சீரமைப்பது பற்றி அரசு முடிவு செய்வதற்கு ஏதும் இல்லை.

(ஆ) தற்சமயம் இல்லை.

(இ) மானியம் வழங்கும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த தர்மபுரி மாவட்டத்திலேயுள்ள '' எலப் நிறுவனம் '' அன்னிய நாட்டு உதவியோடு நடக்கிறது என்பதை அமைச்சரவர்கள் பதிலிலிருந்து அறிகிறோம். அங்கே பணியாற்றும் தமிழக மருத்துவர்களுக்கு நல்லவிதமான சலுகை கிடைக்காத காரணத்தால், அரசே அதை ஏற்று நடத்த முன்வருவதற்கு வேண்டிய வழிவகை செய்ய இயலுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, தொழுநோயாளிகளுடைய நோயைக் களைய வேண்டுமென்பதற்காக, பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த டேனியன் என்பவரால் தொடங்கப்பட்ட டேனியன் நிறுவனத்தால் இந்தத் தொழு நோய் நிறுவனம் 1968-ல் தர்மபுரி மாவட்டத்தில் துவங்கப்பட்டது. அவர்கள் 5 ஆண்டுகள் நடத்துவது என்றும் 5 ஆண்டுகளுக்குப் பின்னாலே அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். அதற்குப் பின்னால் மேலும் 5 ஆண்டுகள் அவர்கள் நடத்த வேண்டுமென்று அரசு விருப்பம் தெரிவித்ததற்குப் பின்னாலே, அவர்கள் நடத்த வழிவகை செய்தார்கள். இப்பொழுதும் அவர்கள் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அரசு, இயக்குநரிடத்திலே இதுபற்றி விசாரித்தபொழுது இன்னும் சிறிதுகாலம் அவர்களே நடத்துவது உசிதமாக இருக்கும். வேண்டுமானால் அவர்களுக்கு உதவித்தொகை வழங்கலாம் என்று தெரிவித்தார்கள். அதன் அடிப்படையில் அவசியத்தைக் கருதி இன்னும் 1983-ஆம் ஆண்டு வரை அவர்கள் நடத்தலாம் என்ற முடிவு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3 இலட்சம் உதவித் தொகை வழங்கும் திட்டம் நிதித் துறையினுடைய ஆலோசனையில் இருந்து கொண்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இந்த '' எலப் நிறுவனம் '' தனியார் துறையைச் சேர்ந்ததாக இருந்தாலும் அரசினுடைய அங்கீகாரம் பெற்றுத்தான் இன்றைக்கு நடைபெற்று வருகிறது. அரசு நிறுவனங்களிலே பணி புரியக்கூடியவர்களுக்கு எப்படி வசதிகள் அளிக்கப்படுகிறதோ அப்படி இல்லாத காரணத்தால், சென்ற ஆண்டிலே 2 மாதம் அங்கு போராட்டமே நடத்தி இருக்கிறார்கள். அதனால், அரசுக்குத்தானே தொந்தரவாக இருக்கிறது. ஆகவே, அரசு நிறுவனங்களிலே பணி புரியக் கூடியவர்களுக்கு எப்படி கொடுக்கப்படுகிறதோ, அப்படி கொடுக்கப்பட வேண்டும், நல்லமுறையிலே அவர்கள் பணியாற்றப்பட வேண்டுமென்று அமைச்சரவர்கள் உத்திரவிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

1979 பிப்ரவரி 22]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே இதற்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். தனியார் நிறுவனம் என்பதாலே நாம் ஆணையிட முடியாது, ஆலோசனை வேண்டுமானால் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10-10.]

2. அறிவிப்புகள்.

(அ) பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையால் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு திரு. ந. குப்புசாமி அவர்களின் பெயர் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளது. முறைப்படி நியமனம் செய்யப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையும் நிரப்பப்பட வேண்டிய வெற்றிடத்தின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால் திரு. ந. குப்புசாமி பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என நான் அறிவிக்கிறேன்.

(ஆ) வேளாண்மைப் பல்கலைக்கழக நிர்வாக வாரியத்திற்கு நியமனம்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கான தேர்தலுக்கு திரு. அ. மா. பரமசிவன் அவர்களின் பெயர் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளது. முறைப்படி நியமனம் செய்யப்பட வேண்டிய வேட்பாளரின் எண்ணிக்கையும், நிரப்பப்பட வேண்டிய வெற்றிடத்தின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால், திரு., அ. மா. பரமசிவன் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என நான் அறிவிக்கிறேன்.